ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஏகாதசி மஹிமை என்னும்

உருக்குமாங்கத சரித்திரம்.



இஃது

பி. முருகேச முதலியார்,

அவர்களது,

சென்னை

ஸ்ரீசுப்பிரமணிய விலாசம் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது

ரிஜிஸ்டர் காபிரைட்] 1933. [அணா 4.

OFFICE OF THE ... 31 JAN 1933 MADRAS
48
121
181666

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஏகாதசி மஹிமை என்னும்

உருக்குமாங்கத சரித்திரம்.

31 JAN 1933
MADRAS

இவை

உடையார்பாளையம் V. V. கோவிந்தசாமி நாயுடு

அவர்கள் குமாரர்

G துரைசாமி நாயுடு அவர்களால்

இயற்றப்பட்டதை,

சகல சுதந்திரமும் பெற்றுக்கொண்டு,

பி. முருகேச முதலியார்

அவர்களாற்றமது.

சென்னை ஸ்ரீ சுப்பிரமணியவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1931. [அணா 4

Rigistered Copy Right.

922:417
N31
181666

2016
784.0954

சிறப்புப்பாயிரம்.

விழுப்புரம்தாலூகா கோண்டூர்-முத்துசாமிபிள்ளை

அவர்கள் குமாரர்

உ. தா. காடுவெட்டாங்குருச்சி கர்ணம் ம-ா-ா-ஸ்ரீ,

நடராஜப்பிள்ளை யவர்களால் இயற்றியது.

உலகமதிற் புகழ்பெருகு முருக்கு மாங்கதன்றன்
 உத்தமஞ்சேர் சரிதமதை யுலகோர்போற்ற
இலகுதமிழ் கீர்த்தனங்க ளாகச் செய்தான்
 இணையில்லா உடையார் பாளையத்துதித்த
அலகில்புகழ் கோவிந்தசாமி செய்த
 அருமைமிகும் நற்றவங்க ளனேகத்தன்னால்
பலகலையில் வல்லவனு யீன்றெடுத்தப்
 பண்புமிகுர் துரைசாமி பாவலோனே.

சிறப்புப்பாயிரம்.

சிதம்பரம் தாலூக்கா ஈச்சம்பூண்டி ம-ா-ா-ஸ்ரீ,

ஆ. உ. சுந்திரராஜ உடையார் அவர்கள் இயற்றியது.

உலகமதிற் புகழ்பெருகு முன்வணகேத னன்பனும்
உருக்குமாங் கதன்கையா றுறைத்தனன்
இலகுதமிழ் கீர்த்தனமா யெளியாரு முணர்ந்திட
ஈடிலாத வுடையார் பாளையத்தினில்
திலகமென வந்தகோ விந்தசாமி செய்தவத்தால்
திகழ்ந்திட வெழுந்தனன் றிண்மையோன்
நலமிகுந்த னூறனிலே னுடனேப் போகருகின்ற
நற்றுரை சாமியெனு னுவலோனே,

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

1. காப்பு.

திருசேரும் நாரணன்றன் றிருவருளான் முத்திதனைத்
திண்மையாகத்
தருமேகா திசிவிரதந் தவராமலியற்றி சப்த
சாகரஞ்சூழ்
பெரும்புவியை யாண்டருக்கு மாங்கதன்றன் சரிதமதைப்
பேசுதற்கு
இருமூலகுக் காதார வேரம்பன் றிணைமலர்த்தா
ளிதயம்வைப்பாம்.

2. விநாயகர் துணை.

எணை-ஆண்டவா-என்ற மெட்டு.

இராகம்-சிந்து பைரவி-தாளம்-ஏகம்.

1. கண—நாதனே நாரி பெற்ற நீதனே
நானிலமீது நானேது மறிந்திலேன்
நாரி பெற்ற நீதனே. (கண)

2. சோதியான குண்டலங் காதிற் றுலங்கும்பரி
சுத்தனே சுத்தனே சுத்தனே சுத்தனே
சொற்சுவை யறியா யிச்சிறுவனையே
பட்சமுடன் சதா ரெட்சித்தருளிவீர். (கண)

3. ஏது மறியா சிறுவன் பாதாரம் நம்பினேன்
இத்ததி இத்ததி இத்ததி இத்ததி
எந்தனையாளவே வந்தருளுவாய் நல்
சுந்தரி பெற்றிட்ட தந்திவதனா. (நாத)

4. மறை முதல் போற்றுகின்ற அரனார் மகனேவுனை
மறவேன் மறவேன மறவேன் மறவேன்
வந்து எந்தனிட சிந்தை மகிழ்ந்திட
பந்த பாசம் நீக்கும் கந்தவேள் மூத்த. (நாத)

Q22:417
H4
2016
784.0954
181666.

5 துரைசாமி தாசன் போற்றும் ஸ்ரீ ஹரி மருகனை
துய்யனே துய்யனே துய்யனே துய்யனே
துரித மாய்ஹரி விரதந்தனை யான்
பிரியமாய் சொல்ல வரமே தருவாய்.

---

3. சரஸ்வதி துதி.

அம்பா மதுரை மீனாக்ஷி-என்ற மெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. எந்தன் நாவில் வருவாயே அம்மா
இனிய வாக்குத் தருவாயே நான்
ஏது மறியா தவன்தாயே
எனக் கருளு வாயே. (எந்த)

2. சந்ததம் போற்றினேன் நானே உன்
தாமரைத் திரு வடித்தானே நாவில்
தங்கிடும் படியாகத் தானே
தனயன் கோரி னேனே, (எந்த)

3. நம்பும் பாலனுக் கருள்வாயே இந்த
நானிலகம் புகழ்ந்திடும் தாயே
நான்முகன் றேவியும் நீயே
நாவில் வரு வாயே. (எந்த)

4. தம்புருவீணை யேந்தும் பாணி யுந்தன்
தாசனுன துரை சாமிக் கருள்
தந்திடுவாய் கலைவாணி
சதுமுகனுர் ராணி (எந்த)

---

4. ஸ்ரீ ராமர் துதி.

மன்று ளாடியவா-என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

1. என்னைக் காருமையா ராமா என்னைக்காருமையா
அன்னை வயிற்றில் தங்கி இன்னிலம் தனில்பிறவாமல் (எ)

அநுபல்லவி.

2. மன்று மறைமுடி மீதினில் நின்றவா
மாமுனிவேண்ட தாடகையைக் கொன்றவா
கன்னி யகலிகை சாபத்தை வென்றவா
காருண்ய ஜனகிதனைப்
பாரியாகக் கொண்டவா (என்னை)

3. அன்னைசொற்படி ஆ ரணியம் சென்றவா
அமரர் முனிவர் துயர்தனை வென்றவா
தம்மையாய் சௌரி தருங்கனி தின்றவா
தாசனான அனுமான்றனை
பாசமுடன் ஆண்டவா. (என்னை)

4. வஞ்சகங் கொண்ட வாலியை வதைத்தவா
வாடிய சுக்கிரீ பன்துயர் தீர்த்தவா
தஞ்சமென்ற விபூ ஷணனைக் காத்தவா
தாட்டிக ராவணனை
வாட்டி யேசங் கரித்தவா. (என்னை)

5. மஞ்சுசீதை மகிழ்ந்திடச் செய்தவா
வானவர் துன்பத்தை நீக்கியே காத்தவா
செஞ்சொலால்பாடி துதித்த துரைசாமி
செய்திட்ட பாவம் நீக்குவாய்
கையிற் சங் காழி பிடித்தவா. (என்னை)

1-வது சீன் விதர்ப்பதேசம் சபாமண்டபம்

நிகழ்ச்சி [உருக்குமாங்கத மஹாராஜன் தர்பார்.]

5. சபை வணக்கம்.

தாஜ ராஜ-என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வந்தனங்கள் தந்தேன்மிக மைந்தன் யானிதோ-பெற்ற
தந்தைதாய் குருமார் சர்ஜனரந்தனர் தங்களுக்கிதோ
சந்தவேளை யிது மிந்தசனத்துக்கு யென்னிரு கரங்கூப்பி

சிந்தைமகிழ்வாய் தந்தேன் வந்தனஞ் சிறியேன் கரங்கூப்பி
நன்னய வுன்னித கெண்ணிய மோங்கிடும் நற்றமிழ் கற்றபுலவர்க்கும்
சென்னி வணங்கி சந்தோஷமாய் செய்தேன் வந்தனம்
செய்தேன் வந்தனம் செய்தேன் வந்தனம் செய்தேன் வந்தனம்

---

6. தேசவிசாரணை.

நடந்த தென்ன சொல்லம்மா-என்ற மெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

1 மதியுள்ள மந்திரியே நீதி
வழுவாத தந்திரியே (மதி)

2. விதிதவருமல் ஆலயம் பூராய்
விருப்பமாய் பூஜை நடக்குதோ சீராய்
பதில்தனை தெளிவுடன் நம்மிடம் நேராய்
பரிவுடன் இப்போது எடுத்துமே கூறாய் (மதி)

3. சதுர் மறைதன்னை அந்தணர் சரியாய்
தாரணியிலோதிடு கின்றாரோ பரிவாய்
இசயந்தெரிந்திட எம்மிடம் தெளிவாய்
எடுத்துமே சொல்லுவீ ரிப்போது விரிவாய். (மதி)

4. முதியவரரசினில் நடந்தது போலே
மும்மாரி பெய்கிறதோ திங்கள் தப்பாமலே
அதினுட விபரத்தை மெத்த முன்னாலே
அறிவித்திடுவீரிப்போ வொன்றுந் தப்பாமலே. (மதி)

நிகழ்ச்சி. [நந்தவனக் காவல்காரர்கள் வருகிறார்கள். இராஜன் விசாரித்தல்.]

கவி.

நந்தவனந் தனையென் நாளும் நாடியே காவல் செய்து
வந்திடுங் காவ லோரே வளமிகும் வனத்தின் சேதி
எந்தனுக் கறிய யிப்போ தேதமில் வார்த்தை யோடு
சிந்தையும் மகிட்சி யாக செப்புவீர் செப்புவீரே.

7. காவல்காரர்கள் பதில் சொல்லுதல்.

பாளையைக் கமுகில் என்ற மெட்டு

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-ரூபகம்.

1. என்னை யன்புடனே கேட்ட மன்னரே நந்தவனம்போல்
எங்குமே கண்டதில்லை யாருமே-நீதி
தங்கு மகாராஜனே நீர் பாருமே.

2. இன்னிலுந் தனிலுமது வுன்னித பூஞ்சோலை போல
எந்தேசங்களிலுந்தா னில்லையே-மலர்
அந்தமதை சொல்ல திற மில்லையே.

3. எந்த வுலகிலுமிந்த நந்தவனம் போல் சிறப்பு
இல்லையென்று சொல்லும்படி யாருமே-கண்டா
லெல்லை யில்லா சந்தோஷங்க ளாகுமே.

4. அந்தமலர் சுந்திரத்தை எந்தனுவா லுமக்கிப்போ
அறியும்படி சொல்லக் கூடுமா—விட்டு
பிரிய யெவர்க்கும் மனம் நாடுமா

நிகழ்ச்சி. [மஹாராஜன் மந்திரி முதலானவர்களை அனுப்பி விட்டு தானுஞ் செல்லுதல்.]

2-வது சீன்—உருக்குமாங்கத மஹாராஜன் நந்தவனம்.

நிகழ்ச்சி [சாப்பால மஹாரிஷி பிரவேசம்.]

8 ஷ ரிஷிகூறுதல்.

தொந்திசரிய-என்ற திருப்புகழ் மெட்டு.

1. எந்த வுலகத்திலுமே யிவ்விதமுள்ள
நந்தவனமு மில்லையே யிதன்பெருமை
எந்தவிதத்திற்சொல்லுவேன் - மல்லிகைமுல்லை வெகுவாக

2. கந்தமலர்கள் பலவே தெரியுமிந்த
சுந்திரனைச் சொல்லவே முடியுமென்று
சருத்தில் நினைக்கவில்லையே - வுன்னிதமுள்ள மலர்பேரை.

3. இன்னிலந்தனிலுள்ள பேர் இதைதெரிந்து
கெண்ணியத்துடன் சொல்லியே முடிவுபெற
எத்தனை தினஞ்செல்லுமோ - என்றுமன மெண்ணுதே.

4. நன்னயத்துடன் தங்கியே மூருந்தனையான்
எண்ணித்தவங்கள் செய்யவே முந்திஜென்மம்
நற்றவஞ் செய்தபாலனே - இவ்வனத்தையுங் கண்டேனே.

3-வது சீன்—நந்தவனம்.

நிகழ்ச்சி. [தேவகன்னிகள் பிரவேசம்.]

9. தேவகன்னி சொல்வது.

சும் சும் சும் ப்யாரி என்ற மெட்டு.

பல்லவி.

எந்தன் கண்முன் தெரியும் நந்தவனம்போல்
எவ்வுலகி லுமறியேன்—ஹா ஹா ஹா.

சரணங்கள்

பாரிஜாத மொடு சூரியகாந்தி
பரிமளம் வீசும் மலருடன் செவந்தி
ஜோர்தான்
யார்தான்
சொல்லவும் வல்லவர்.
அதி விரை வுடன் சென்று
வித வித மலர்க் கொய்வேன். (எந்)

4-வது சீன் கொலு மண்டபம்.

நிகழ்ச்சி. [உருக்குமாங்கத மஹாராஜன் மனைவி, சந்தியாவளி தன் மனக்குறையை இராஜனிடம் தெரிவித்தல்.]

அன்னமே இந்த வனத்தி என்றமெட்டு.

இராகம்-காம்போதி-அடதாளம்.

(உருக்குமாங்கதன்)

1. காதலியே என் னருமையான கண்ணே
களிப்பாய் உத்தரஞ் சொல்லுவாயடி பெண்ணே
மாதவனை பூஜை செய்து நன்றாய்தானே
மனைவி நூறுபேருஞ் சுகமோ தேனே (கா)

(சந்தியாவளி)

2. நாதனே வுமதுகிருபை யால் தானே
நன்றாயிருக்கிறோ மென் றாலுஞ் சீமானே
காதாலாயாங்களுஞ் சூடும் புட்பம் தானே
கனமாயிப்போ வரவில்லை பூமானே. (நா)

(உருக்குமாங்கதன்)

3. இத்தரணியி லென் நந்தவனம் போல
எங்கு மில்லையென்று யாருஞ்சொல்வதாலே
அத்தனை பூக்களும் எவ்விதமானதோ
அடி பெண்ணே அம்மலர் திருட்டுப்போனதோ (இத்)

(சந்தியாவளி)

4. உத்தமனே மலர் இத்தனைநாளாய்
ஒருவரும் ஜாஸ்தியாய் கொண்டுவராதாலே
கர்த்தன் திருமால் கழலிணை அர்ச்சிக்க
களிப்பா யனுப்பினீ ரென்று யிருந்தோமே (உத்)

நிகழ்ச்சி. [இராஜன் சந்தியாவளியை அனுப்பிவிட்டு காவல்காரர்களை வரவழைத்து விசாரித்தல்.]

சித்திரப் பச்சை கச்சை — என்ற மெட்டு.

இராகம்-அடாணு-தாளம் ரூபகம்.

கண்ணிகள்.

1. நந்த வனந்தனில் புட்பம் குறைந்தது ஏனோ-அதை
நன்றாயறி விக்காமல் நின்றாலும் விடுவேனோ
எவ்விதம் மலர் இப்போகுறைந்தது
இனிதாமத மில்லாமலே க்ஷண போதினி லறிவிப்பாய். (ந)

2. எந்த தேசத்திலுமிந்த நந்தவனம் போலே - பூத்த
தெங்குமில்லை யென்று யாருஞ்சொல்வார் புவிமேலே
அந்த மலரெல்லாம் எவ்விதமானது
அறியும்படி பிரியத்துடன் சரியாகவே தெரிவிப்பாய். (ந)

10 காவல்காரர் சொல்லுதல்.

கவி.

மாதவன்றனை யென்னாளும் மனதினிற் றோற்றரித்த
பூதலந் தன்னையாளும புகழ்பெற்ற ராஜபூபா

சோதனை செய்துயாங்கள் சோரரைப் பிடித்துவந்து
நீதில்லா சமுகமுன்னஞ் சேர்க்கிறோம் பொருப்பீரையா.

நிகழ்ச்சி. [காவல்காரன் திருட்டைக் கண்டுபிடிக்க முடியாமல் சாப்பால மஹாரிஷிபேரில் சந்தேகப்பட்டு உருக்குமாங்கத மஹாராஜனிடம் அழைத்து வருதல் இராஜன் முனிவரை நமஸ்கரித்தல்.]

வெள்ளிமலை யொத்த பலமேடை-என்ற மெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. நாதனே வுன்பாதம் நமஸ்காரம் இங்கு
நாடிவந்த தோதுவீ ரின்னேரம் என்ன
நற்றவஞ் செய்தேனோ முன்னூண் இத்தனை தூரமுந்தேடி
வந்தீர் சேவை தந்தீர்.

2. பாதமலர் சிரசினிற் சூடுவேன் உந்தன்
பன்னிரு நாமந்தனைக் கொண்டாடுவேன் ஹரி
பத்தி செய்யும் உத்தமனே நத்தியிங்கு வந்தது
ஏது இப்போது.

3. முந்தி செய்த நற்றவமோ அறியேன் எங்கள்
மூதாதைகள் செய்தவமோ தெரியேன் இந்த
மூடபுத்தி நீங்கிடவே கூடமான வழியதைச்
சொல்லுவீர் இப்போ விள்ளுவீர்

4. எந்தனுக்கு நல்ல வாந்தாரும் நான்
ஈடேற வுமது கண்ணால் பாரும் தாம்
இங்குவந்த தென் விசேஷஞ் சங்கையார வோதுவீர்
ஐயா புகழ் துய்யா.

கவி.

மன்னு நாரணனை யானும் மனதினிற் றோத்தரித்து
உன்னித தவங்கள் செய்து வுளமகிழ்ந் திருக்கும்போது
மன்னவா யென்னை யிங்கு வரவழைத் திட்டசேதி
இன்னதென் றெனக்குநீரு மியம்பிட வேண்டுமிப்போ.

நிகழ்ச்சி. [காவல்காரர்கள் சாப்பால ரிஷிபேரில் சந்தேகப்பட்டு அழைத்து வந்ததாய் இராஜனிடம் தெரிவிக்க இராஜன் ரிஷியினிடம் கூறுதல்.]

கவி.

1. நந்தவனந் தன்னிலுள்ள நறுமல ரெல்லாஞ் சோரர்
எந்தனுக் கறியா வண்ண மெடுத்துமே செல்வதாலே
அந்தநல் மலரைக் கொய்யு மறிவிலாக் கள்ளவர் தானும்
வந்திடப் பிடித்துக்கொண்டு வரும்படி யாக்கியா பித்தேன்.

கவி.

2. காதலாய் புட்பமெல்லாங் கவர்ந்துதான் கொண்டுபோகும்
பாதக னின்னுனென்று பார்த்துதான் பிடித்திடாமல்
ஏதுமே யறியாதும்மை யிட்டுக்கொண் டிங்குவந்தார்
ஆதலாற் பொருப்பீருந்த னடியிணை துதித்தோன் காதா.

---

11. சாப்பால ரிஷி கூறுதல்.

இசைந்த ஏறும் என்ற திருப்புகழ் மெட்டு.

1. நிறைந்த பூக்கள் குறைந்த சேதி தெரியவே
நிகழ்த்துவே னெநதன் னுளத்தினை நீரும் அறியவே
2. விரைந்து தேவமகளிர்கள் சோலை புகுந்துமே
வெடித்த மாமலர் திருடியே போகிறார் மகிழ்ந்துமே.
3. பரந்துபோகு மெழின்மிகு மாநகரைப் பார்க்கவே
பருத்த தோளா வுரைத்திடுவே னுமக்காகவே.
4. சிறந்த நீர்நந்த வனத்தினில் காட்டிடுங் கொமுட்டியே
சிவந்தகாலினில் கொடிபட மாதர்கள் நிற்பாரே.

நிகழ்ச்சி. [நந்தவனத்தில் கொம்மட்டி செடி பயிர்செய்து வைக்கிறார்கள்.]

5-வது சீன்—நந்தவனம்.

நிகழ்ச்சி. [தேவக்கன்னிகைகள் மலரெடுத்துப் போகும்போது ஒரு கன்னிகை காலில் கொம்மட்டி செடிபட்டு நின்றுவிடுகிறாள்.]

பூமிமெச்சிடும் அண்ணாமலை-என்ற மெட்டு.

இராகம்-தேசிகமுகாரி-அடதாளம்.

1. வாசுதேவனிட பூசைக்காக மனம்நாடியே
யாங்கள் கூடியே விரைந்தோடியே - வெகு
வாசமுள்ளமலர்
ஆசையா யெடுத்தோம் தேடியே

2. நேசமுள்ள எந்தன் தோழிமார்களுடன் வந்தேனே
மனம் நொந்தேனே அகம் வெந்தேனே - இந்த
நீச்சக்கொம்மட்டியின்
தோஷத்தாலே யானும் நின்றேனே

நிகழ்ச்சி. [சாப்பால மஹாரிஷி மஹாராஜனை வரவழைத்தல் மஹாராஜன் தேவகன்னிகையை விசாரித்தல்.]

12. தேவகன்னி சொல்வது

கவி.

பாசமாய்க் கேட்கும்மன்னா பாவையான் தேவக்கன்னி
வாசுதேவன் பூசைக்கு மலரெடுத் தேகும்போது
காசுதானுளக் கொம்மட்டி கால்தனில் படநின் றேனென்
தேசமே செல்லயேகா தசிப்பலன் சேரத்தாரீர்.

---

13. உருக்குமாங்கதன் துயரப்படுதல்.

புத்திரசிகாமணியே-என்ற மெட்டு.

கண்ணிகள்.

1. காரணன் றனையர்ச்சிக்க நறுமலர் போனதென்று
காரணந் தெரியாமலே கவலையடைந்தேன் வீணாய்

2. சோரர்கள் இன்னாரென்று சோதிக்கவும் எண்ணினேனே
பார்தனிலே பொல்லாத பாவியெனும் பேரானேனே

3. ஏகாதசி விரதந்தன்னை இப்புவியோர்கண்டதில்லை
ஆகையா லெனக்குசொன்னால் அளிப்பதற்குத் தடையில்லை

4. மேகவண்ண னைத்துதிக்கும் மெல்லியரே எந்தன் பாபம்
போகும்படி தயவுசெய்து புகன்றிடுவீரிந்த நேரம்

14. தேவக்கன்னி சொல்வது.

பார்வி-சொண்டிச்சிந்து.

1. இராஜனே கேளுமையா-உமது
நற்றேவிமார்களிற் சந்திபாவளி
போஜனம் செய்த வொருநாள்-காய்கறி
புசித்திட நன்றுயில்லாததாலே

2. சமையற்காரி தன்மேல்-மிக
சகிக்கொணுகோபம் தானுமேவைத்து
இமைப் பொழுதாகிலும்-இன்பம்
இல்லாதபடிக்கவள் காவலில் வைத்தாள்

3. காவலில் வைத்த அன்று-சமையற்
காரியும் இரவில் புசிக்கவில்லே
கோபமும் பசித்துயரால்-மறுநாள்
கொஞ்சங்கூட நித்திரை செய்யவில்லே

4. சாந்தமும் உண்டாகி-மறுபடி
சாதமும் போடவுன் தேவிசொன்னுள்
வேந்தனே கேளுமையா-மூன்றும் நாள்
விடியற் காலேயில் ஸ்னனஞ் செய்துவுண்டாள்

5. மறுபடி காவலில் வைக்க-மனம்
வருத்தத்தி லன்றும் தூங்காதிருந்தாள்
திருமால் தனே துதிக்கும்-இராஜனே
சேர்த்தா னுன்மனவி நான்காதினம்

6. இந்த மூன்று தினத்தில்-ஒருவேளே
இருந்தது தசமிதினமாகும்
செந்திரு மார்பனருள்ால்-முத்தி
சேருமேகாதசி இரண்டா நாள்

7. உதயத்தில் ஸ்னனம்செய்து-அமுது
உண்டதினம் துவாதசியாகும்
அதனு லவள் முன்னம்-செய்த
அநேககோடி புண்ணியத்தின் பலன்

8. ஏகாதசி விரதம்-அவளுக்கு
இந்த ஜென்மந் தனில்கிடைத்தது
ஆகையால் தயவு செய்து—அவளால்
அந்த விரதபலன் தத்தஞ்செய்வீர், (இராஜ)

நிகழ்ச்சி. [மஹாராஜன் சமயல்காரியைக் கொண்டு ஏகாதசி பலனைத் தேவக்கன்னிக்கு தத்தஞ்செய்தல் தேவ கன்னி அந்தரமார்க்கஞ்சென்று சொல்லுதல்.]

கவி.

1. இந்திரனிடத்திலன்பா யிணையிலை துருவாசர்
தந்திட்ட திருஆரத்தை தகுவேந்தன் மதியாதாலே
செந்திரு கடாக்ஷம்நீங்க செபித்ததா லிலக்குமிப்பால்
உந்திதன் னிடமறைந்தா ளும்பர்கள் வருத்தங்கொண்டார்.

கவி.

2, உந்திப்பூத் தோனுமக்த உம்பர்கள் தனைரட்சிக்க
மந்திரகிரியைக் கொண்டு வாரிதி கடையச் செய்தான்
இந்திரை தன்னைவேண்டி இமையவர் விரதம் பூண்ட
அந்நாள் தசமியேகா தசிதுவா தசியுமாமே.

கவி.

3. தேவர்கள் புகழுமேகா தசியதன் விரதந்தன்னை
ஆவலா யாராளுறு மனுட்டித்து வருவாராகில்
பாவமே யொழிந்துநல்ல பதவியாம் நாரணன்றன்
சேவடிதனையே சார்வார் செப்பினேன் நம்புவாயே.

நிகழ்ச்சி. [உருக்குமாங்கத மஹாராஜன் ஏகாதசி விரதத்தை அனுட்டித்து தன் ஆட்சிக்குட்பட்ட யாவரையும் விரத மிருக்கும்படி ஏற்பாடு செய்தல்.]

6-வது சீன்—கையலயங்கிரி.

நிகழ்ச்சி. [எமதருமராஜன் சிவபெருமானிடத்தில் முறையிடுதல்.]

கண்ணாயிரம் படைத்த-என்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம் ஆதி.

கண்ணிகள்.

1. விண்ணோர் துதிக்கும் முக் கண்ணாயெனது தயர்
விலகிட வுமதிடம் விரைந்து அடியேனும் வந்தேனே ஒரு
வேலையு மில்லாது காலத்தைக் கழித்துயான் நொந்தேனே

2. அண்ணலே துயராச்சு கண்ணியமெல்லாம் போச்சு
அவனியில் மானிடர் அகந்தனைச் செய்வது இல்லையோ வேலை
அற்றுநான் சும்மா யிருப்பது யார்செய்த தொல்லையோ

3. தேவனே எந்தன் குறை போவதற்கு முறை
செப்புவீ ரிப்பவே அப்பனே வுன்னடி போற்றினேன் உயர்
திங்களுங் கங்கையுஞ் சூடிய பரமனே ஏற்றினேன்

4. ஆவியும் சோறுதய்யா தேவர் துதிக்கும் மெய்யா
அதிவிரைவுடன் யானும் கதிபெற்றிட வுரைசொல்லுவீர் என்
ஆகூலம் போகவே தோகை பாகனே இப்போ விள்ளுவீர்

7-வது சீன்—சத்திய லோகம்.

நிகழ்ச்சி. [சிவபெருமான் பிரமதேவனிடத்தில் எமதருமராஜனிட மனத்துயரை தெரிவித்தல்.]

15. பிரமதேவன் சொல்லுதல்.

விருத்தம்.

மண்டலத்தை யாளுருக்கு மாங்கதன்று னேகாதசி மகிமைதன்னே
எண்டிசையின் மாந்தருக்கு மெடுத்தோதி யுருதியுட னிருப்பதாலே
விண்டுவின்றன் கிருபையினல் மேலான முத்திதனை விரைந்து சேர்ந்தார்
கண்டவர்கள் கருதுமோக னுங்கியினல் விரதமதைக் கலைப்பேன்போவீர்.

நிகழ்ச்சி. [எல்லோரும் போய்விடுகிறார்கள். பிரமதேவன் மோகனுங்கி என்னும் ஓர் பெண்ணைத் திருஷ்ட்டித்து அவளிடம் தெரிவித்தல்.]

கவி.

மங்கையரே மோகனுங்கி வழுத்துவேன் கேளாய் நீதி
தங்கிடும் விதர்ப்பதேசம் சடுதியிற் சென்று நீயே
இங்கிதம்பேசி ருக்மாங்கதனையே மாற்றி விரதப்
பங்கமே செய்வாயன்று பாலன்றன் சிரங்கேட்பாயே.

8-வது சீன்—மந்தரகிரி பக்கத்திலுள்ள பூஞ்சோலை.

நிகழ்ச்சி [மோகனுங்கி கழுகுமரக்கவில் பூட்டிய பொன்னூஞ்சலி லிருந்துகொண்டு உருக்குமாங்கதன் வராததால் துயரப்படுதல்.]

என்தாய் வயிற்றினில்-என்ற மெட்டு.

1. நான்முகனேவுந்த னுரைப்படியே நானிங்குவந்தேன்
நானிலத்தை யாளும்ருக்கு மாங்கதன்வராமல் நொந்தேன்
கானகத்தி லேதனியா கலங்குகின்றேனே மாது
கருத்திலே நினைத்தவரைக் கண்டிலேனே புவிமீது

3. பிர்மதேவா யென்தனைநீர் பேசிஇங்கு யேன்விடுத்தீர்
பேதைமிக வாதைபட பெண்ஜென்மம் தனைக்கொடுத்தீர்

4. தர்மருக்கு மாங்கதனை தையலருங் காணாது
தவிக்கின்றேன் சடுதியிலே தான் விடுவீரிப்போது

நிகழ்ச்சி. [பிர்மதேவனிட ஏவலின்பேரில் மிருகங்கள் பயிர்களை அழித்தல் குடிகள் இராஜனிடம் முறையிடுதல்.]

9-வது சீன்—காடு.

நிகழ்ச்சி. [உருக்குமாங்கத மஹாராஜன் வேட்டையாடுதல்.]

சாரங்கதன்னிலோர்-என்ற மெட்டு

கண்ணிகள்.

1. மிக்க பலங்களுடைய வீரர்களே வாரீர்—அதி
வேகமாயோடுங் காடிப் பன்றிகளைப் பாரீர்
பக்குவமாகவே வேட்டைகளாடுவோம்
பாலாயீட்டி கையிற்கொண்டு நாலுதிக்கும் வளைத்திடுவோம் (மி)

2. அக்கிரமஞ் செய்த துஷ்ட மிருகந்த னாமே—வேட்டை
யாடியொரு நொடியிற் றுலைத்திடுவோமே
சிக்கென நீங்களும் அம்பை விடுவீரே
சிங்கம்புலியானையுமே தங்கிடாமற் கொல்லுவீரே. (மி)

3. நமது நாட்டிலுள்ள நல்லபயிர்களைத்தானே—மிருகம்
நாசங்கள் செய்யவே யானுந்துய ரடைந்தேனே
மமதைப் பிடித்த வரிவேங்கையைப் பாரீர்
மல்லர்களே வில்லம்பால் கொல்லுவீர்கள் கொல்லுவீர்கள். (மி)

---

16. மோகனாங்கி உருக்குமாங்கத மஹாராஜனைக்கண்டு மோகித்தல்.

பாராமுக மேனையா-என்ற மெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி தாளம்-ஆதி.

பல்லவி.

1. சேராத ஜென்மம் வீணாகும் இம்மன்னனுடன்
சேராத ஜென்மம் வீணாகும்

அநுபல்லவி.

2. நேராக நிற்குமிந்த தீரன் அழகை சொல்ல
யாராலு மாகாதென சீராய் மொழிந்திடுவேன்
மாரன் விடுங்கணையின்
நேரம் தீர்த்திடுமுப
காரன் புஜபல கெம்
பீரன் ஆகுமிவனே. (சேராத)

3. மாரன் மானிட அவதார மெடுத்து இந்த
நேரம் எந்தனிடம் வந்தாரோ யறிகிலேனே
நானே இனி யவரைத்
தானே பாராமலிருக்
கேனே புகழ்பெற்ற சீ
மானே ஆகுமிவனே. (சேராத)

---

17. உருக்குமாங்கத மஹாராஜன் மோகனாங்கியைக் கண்ணுற்று சொல்லுதல்.

பரமானந்த மெய்ப்பரங்குன்றேன்-என்ற மெட்டு.

ஓரடிச் சந்தம்.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

அதிரூப வதிதனைக் கண்டேன்
ஆனந்தங் கொண்டேன் (அதி)

அநுபல்லவி.

பூதலந்தனிலிவட் கீடது வுண்டோ
புகழ்பெற்ற சீமாட்டி யெனத்தடையுண்டோ
பேதையால் சுகம்விட வேறுதானுண்டோ
பெண்ணுளிரதி யிவட்கிணையது வுண்டோ. (அதி)

சரணங்கள்.

முகமே பூரணமதியாகும் இம்மாதைமருக
சுகமே யதிகமாயுண்டாகும் தோகையின் தொனி
ஜெகமே புகழ் இராகமாகும் தேவியாய் வந்தால்
அகமே மகிழ்வது வுண்டாகும் நான்முகன் தானே

நன்றே நினைந்தே மகிழ்ந்தே புகழ்ந்தே—இம்மாதை
செய்யவே யெண்ணி
முந்தே மிகுந்தே சிறந்தே இருந்தே—நல்கோதை
அழகை சேர்த்து
தந்தே அமைந்தே முடிந்தே விரைந்தே—இப்பேதை
வந்தனள் என்று
சிந்தை நினைந்தே யுவந்தே மணந்தே—கொள்ளவே
எண்ணினேனிப்போ
சோகமே மிகவாகுதே மையலாகுதே மனம்நோகுதே—இவளாலே
மாரனார்க்கணை
வேகமே படலாகுதே மிகதாபமே யெனக்காகுதே—மங்கையாலே
இப்போது தானே
தேகமே அதியோகமே செய்ததாகுமே இவள் சினேகமே—கிடைத்தா[ல்
எண்ணிலாசுகம்
ஆகுமேதுயரேகுமே புகழாகுமே மகிழ்வாகுமே-இனிமேலே
என்பது முண்மை

மெத்த வழகுற்றவளை சித்திரத்தில் வைத்தெழுத
இத்தரணி யுள்ளவர்க்கு சற்றுமுடியாது எனச்சொல்வேன்
இவள் எனக்கு
ஜோடியே யென்பது நாடியே அன்பது
நீடியே மிகவுங் கொண்டாடியே பேசிடலானேன்
இனியான் சென்று
கூடியே மதனூலை தேடியே புகழது
பாடியே துயரது வோடியே போகவே செய்வேன்
இனியான் சென்று
கருத்திலுதித்த வருத்தந்து லைந்திடுங்
கட்டழகியென திட்டமுடன் சொல்வேனே
மங்கை அழகு

திரத்தை யெடுத்து வுரைத்து முடிக்கவே
செல்லுமே புவியுள்ளவர்க்கு வெகுநாளும்
பெண்ணுளிடமே
சந்தத மிருந்து யெந்தன் சிந்தை மகிழ்ந்திடுவேன்
சுந்திரவதியே யினிதுணையென நம்பிடுவேன்
எந்தன் பாரியாகச் செய்ய இனியான் முயன்றிடுவேன்
இந்த ஜென்மம் செய்தபலன் இப்போது அடைந்திடுவேன் (அதி)

18. உருக்குமாங்கத மஹாராஜன் மோகனாங்கியை வினவுதல்.

கவி.

சந்திரவதியே யிந்தசோலையிற் றனியாய் நீயும்
வந்துதானிருக்கு முன்றன் வழிமுறை கேட்பதற்குச்
சிந்தையும் மகிழ்ச்சியாகத் தேடியே யிங்குவந்தேன்
எந்தனுக்கறிய விப்போ தியம்பிட வேண்டும் பெண்ணே.

19. மோகனாங்கி பதில் கூறுதல்.

கவி.

சத்திய லோகவாசி சதுர்முக னென்றன் றந்தை
பத்தியாய்ப் பாரின்மீதே காதசி நோற்ற பேரை
சித்தமும் மகிழ்ச்சியாகச் செய்துக்கொள் மணந்தா னென்ன
இத்தலந் தேடிவந்தே னென்பெயர் மோகனாங்கி.

20. உருக்குமாங்கத மஹாராஜன் மோகமுறல்.

வாலவயதாகி யழகாகி-என்ற திருப்புகழ் மெட்டு.

1. மானிடப் பாரிவெகு ரூபவதி யாவளென
மானிடர்க ளோதுவது தாரணியி
லானும்வெகு வாகமுனங் கேட்டுமிருந்
தாலுமிந்த மாதினிட அழகாமோ.

2. தாரணியில் யாருமிந்த மாதுதனக் கீடுசொல்ல
தானுமுடி யாதுமிக ரூபவதி
யாகுமென சாஸ்திரங்க ளாலுமெடுத்
தோதியதி தீரமுடன் புகல்வேனே.

3. மாதினிட ரூபந்தனை கூறுவதற் கேதாயொரு
வாறுமெடுத் தோதிமுடி வாகவெகு
காலமது மானிடர்க்கு மாகுமென
நானுநினைத் தேனேமையல் கொண்டேனே.

4. சாதுமுத லாகமற்றப் பேருமிவ ளாசைவிட
தாரணியி லேநல ஜாதி யுள்ள
மாதெனவுஞ் சாற்றுவதற் கேதுதடை
யாதுங்கிடை யாதேயென்று சொல்வேனே.

5. வாசமலர் சூடியேசங் கீதமது பாடிநல்ல
வாலிபமுங் கூடியுள்ள மாதுறவு
மாடியினி வாழ்ந்துசுக மாகயிருக்
காதுபுவி மீதுதனி யிருப்பேனோ.

6. ஆசையொடு பேசிமக ராசியெனும் மாதிவளை
ஆவலொடு கூவியழைத் தேகிமிக
நேசமொடு நானுமிருக் காதேயிங்கு
வீணிலினி காலமதைக் கழிக்கேனே.

---

21. உருக்குமாங்கதனுக்கும் மோகனுங்கிக்கும் தர்க்கம்.

மயிலேவடி வேனேடெதிர் வா வா-என்ற மெட்டு.

இராகம்-மால்கோவ்ஷ்-தாளம்-சாப்பு.

உரு.

1. அன்னமே யெனையே அணைந்திட வா வா. (அன்)
2. மின்னலி னிடைமாதே யென்னையே வெருக்காதே
விருப்பம்வைத் தேவருவாயிப் போதே. (அன்)

மோக.

3. மன்னரே யென்ன வோதினீ ரப்பால் போம் போம். (மன்)
4. கன்னி யிடம்வாது காட்டுவது தகாது
கடிகியே சென்றே விடுவீ ரிப்போது. (மன்)

உரு.

5. மன்மதன் கணைதாக்கி வந்தேனே வுனைநோக்கி
வஞ்சியே யெனையே மணாளனு யாக்கி. (மன்)

மோக.

6. நன்னய மாகப்பேசி நாடுகிறீ யா தோஷி
நடுக்கமே யாகுதே மனங்கூசி (மன்)

---

22. உருக்குமாங்கதன் கூறுதல்.

மஞ்சுநிகர் குந்தள மின்னே-என்ற மெட்டு.

இராகம்-மோஹனம்-தாளம்-சாப்பு.

1. வஞ்சியே மதிமுகமானே இந்தப்புவியை சொந்தமாயாளும்
மன்ன னென்றறி வாய்நீ தானே அடி
வருவாயென் பின்னால் தருவாய் சற்சுகம்
விருதா வாய்நின்று இருப்ப தாகுமா
வாய்திறந்து பேசலாகாதா
சுந்தர மானே இந்த வேளையே
வந்துமே அணைய லாகாதா.

2. நெஞ்சதி லிறக்கம் வையடீ தேன்மொழி யாளே வான்லோகத்தாளே
நேசமாய்த் தயவு செய்யடீ வெகு
நேரமாயுனைக் கோறினே னடீ
மாரன்கணைக் குபகாரஞ் செய்யடீ
நேர்த்தி யுள்ள அபாஞ்சியே
மனது வைத்து எனை மணந்தால்
நீங்கா திருக்கலாங் கொஞ்சியே.

3. பஞ்சபாணத் தாலேநொந் தேனே பசுங்கிளியே நிசமாயுன்னை
பாரி யாக்கவே நினைந் தேனே
பாரின்மே லினியாரும் வேண் டிலேன்
வேறுமொழி தனைக் கூறாதே பெண்ணே
பாராளும் மன்னனும் யான்றானே
பாவையரே தேவியைப்போல்
பட்சமுடன் வைத்திருப் பேனே.

4. மிஞ்சிய மதன்க ணையாலே மெல்லியரே எல்லையில்லா
வேதனை யடைந்தே னுன்னாலே பெண்ணே
வேகமாய் வந்து மோகந் தீரடி
நாகரீகம் நிறைந்த மயிலே
வேறுமா தரை நினைக் கேனே அடீ
தையலரே மெய்யாகு மிது
விரும்பியே வுனையழைக் தேனே.

23. உருக்குமாங்கதன் மோகனாங்கி இருவருக்கும் தர்க்கம்.

சுந்தரா கங்கை-என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

உருக்குமாங்கதன்.

பல்லவி.

1. உந்தனைநம்பி ஓடியே வந்தேன் கூடிட வாவா.

அநுபல்லவி.

2. சுந்தரமாதே நிந்தை செய்யாதே
துணையது வேறுமில்லை சோக மாகினேன்
துயரது போகநீ தயவது புரிவாய் (உந்)

மோகனாங்கி.

பல்லவி.

3. எந்தனைமெள்ள ஏமாற்றவோ நினைத்திடலானீர்

அநுபல்லவி.

4. தந்திரம் நினைந்து வந்தீரோர் முனைந்து
தையலி டத்தினில் சாடைகாட் டிடாமல்
சடுதியில் நீரும் விடுதியே போவீர் (எந்)

உருக்குமாங்கதன்.

5. இந்தநல் தேகம் வந்ததே யோகம்
என்றுநினைத் தேனடி ஏதும்வேண் டிலேன்
என்னு டன்கூட அன்னமே வருவாய் (எந்)

மோகனாங்கி.

6. சொந்த மாய்வேண்டி வந்தாலுந் தீண்டி
சுகமுட னிருந்திட தோகை நானுமல்ல
சொல்லாம லிப்போ தில்லமே செல்வீர் (எந்)

---

24. உருக்குமாங்கதன் கூறுதல்.

கவி.

மதிமுகப் பெண்ணேகேளாய் வான்லோகக் கன்னியாலே
கெதிதரும் மார்க்கந்தன்னைக் கேட்டேகா தசியுனேனே
விதியது தவறாவண்ணம் விருப்பமாயிருப்பதாலே
பதிதனக் கேகுவோநீ பரிவுடன் வருவாய்மாதே.

25. மோகனுங்கிக் கூறுதல்.

பாதிராத்திரி வேளையில் என்றமெட்டு.

1. நேசமாயிங்குப் பேசவந்தது
நீதியல்லவிப் போது நீர்
நினைத்ததுமுடி யாது வெகு
நேரமாக வீண் வாது வேண்டாம்
நெஞ்சத்தில் தைத்த ஆசைபோக்கவே
நிகழ்த்துவே னிந்தமாது.

(உருக்குமாங்கதன்.)

2. மாசில்லாத பைந்தொடி யுன்றன்
மனமகிழவே யானே செய்யும்
வல்லவன் பாராய்த்தேனே ஒரு
வர்மமில்லாமல் தானே இன்ப
மங்கையே அந்த சங்கதிதனை
மகிழ்ச்சியாய் சொல்வாய் மானே

(மோகனுங்கி.)

3. வாசுதேவன்மே லாணைவைத்தொரு
வரமெனக்கு நீர் தாரும் அப்போ
வருகுவே னென்று தேரும் இனி
வந்திடும் நல்ல பேரும் உயர்
மதிகுலம் திகழ் மன்னவா வாம்
மாதவனறியக் கூறும்

(உருக்குமாங்கதன்)

4. பாசமாய் நீயுக்கேட்கும் வாத்தைப்
பற்றித்தடை செய்யேனே அந்த
பாவி மாரனுந் தானே இம்சை
பண்ணுகிறுன் செந்தேனே அதைப்
பரிவுடனிங்கு அறிவித்தா லிப்போ
பட்சமாய் தருவேனே

மலடி வயற்றி மகன்போ என்ற திருப்புகழ் மெட்டு.

மோகனுங்கி.

1. எந்தனிடம் இனி வீண்வாது பேச
சுந்தரனே சற்றும் முடியாது உம்
சிந்தை மகிழ்ந்திட யிப்போது யான் சொல்வேனே

உருக்குமாங்கதன்.

2. பைந்தொடியே வரங்கேட்பாயே இப்போ
தந்திடுவேன் துயர் தீர்ப்பாயே பெண்ணே
எந்தனிட சொல்லே நம்புவாயே மதிமுகமானே

3. சுந்தரனே ஸ்ரீஹரி மீதே ஆணை
சிந்தை மகிழ்வா யிப்போதே வைத்து
எந்தனுக்குவரந் தருவீரே புகழ் சீமானே.

உருக்குமாங்கதன்.

4. செந்திரு மார்பனே சாட்சியாக வரம்
முந்தனுக்கே யானுந்தருவதாக என்
சிந்தைதனிலே பூர்த்தியாக விப்போ தெண்ணினேனே

மோகனாங்கி.

5. தந்திடும் வரத்தை சீமானே நீர்
எந்தகாலத்திலுந் தானே தர
சிந்தை மகிழ்வென பூமானே இப்போ சொல்வீரே.

---

26. உருக்குமாங்கதன் கூறுதல்.

வேதமுடி மீதுநின்று விளங்கிடும் நாரணன்றன்
பாதமலர் தன்னையானும் பண்புடனே நினைத்து
ஓதிடும்வா மும்பெண்ணே வுண்மையா யானதாலே
காதலாய் நீயுமெந்தக் காலங்கேட்பினுங் கொடுப்பேன்.

திமழ்ச்சி. [உருக்குமாங்கத மஹாராஜனும் மோகனாங்கியும் அரண்மனை செல்வது இருவருக்கும் திருக்கலியாணம்.]

பொன்னுலவு சென்னிக்குள-என்ற மெட்டு.

1. விதர்ப்பதேசங்கள் சுற்றி யிருக்கும் மற்றதேச
வேந்தர்களும் வந்துக் கூடினார் மணம்
நேர்ந்தவிஷயமாகக் கொண்டாடினார் பல
வேதியர்மிக நீதியாகவே ஆதிமாமறை யோதிடவே
வேண்டிய ஜனங்கள் புகழ் பாடினார் உயர்
பாண்டு வாத்தியங்கள் மிக சாடினார்.

2. அதிர்வெடி சத்தங்கள் கிடுகிடென்னவே
அவனியோர்களுங் கொண்டாடினார் பெண்கள்
கவனத்தோடு கீதம் பாடினார் மங்க
ளாசிகள் சொல மாசில்லாவெகு பூசுரர்களும் ஆசையோடு

(22:41) NB/ 181666.

அந்த சபைதன்னில் வந்துக் கூடினர் அப்போ
சந்தோஷத்துடனே கொண்டாடினர்.

3. நாகசுர வாத்தியம் முழங்கவே சபையோர்கள்
நறுமலர் வாரி வாரிப் போடவே அப்போது
திருமணம் ருக்மாங்கதன் சூடவே
நலமே மிகுஞ்சபை யோர்மிக உளமேகளித் திடவேண்டியே
நற்சாந்து தாம்பூலந் தந்தனர் அதை
உற்சாகத் துடன் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சி [உருக்குமாங்கத மஹாராஜன் மோகனாங்கியும் அந்தப் புரம் செல்வது.]

10-வது சீன்—சபா மண்டபம்.

நிகழ்ச்சி. [தருமாங்கதன் ராஜ தர்பார் ஏகாதசி விரதத்தினத்தை வள்ளுவனைக் கொண்டு பறையறிவித்தல்.]

மார்கழி மாதம்-என்ற மெட்டு.

1. விதர்ப்ப தேசத்தில் வாழும் நல்மாந்தரே விளம்புவேன் கேட்பீரே
வேதம் புகழ்ஹரிநாரணனுக் குகந்த விரதநா ளறிவீரே.
2. பதவியை யடைய இதுநல்ல வழியே பாரினிலுள் ளோரே
பக்தியா யேகாதசி விரதம் பரிவுடன் இருப்பீரே.
3. திருமா லருளால் சேரலாம் நற்கெதி ஜெகத்தினுள் ளோரே
செப்புவேன் ஒருவேளை தசமியின்று சிட்டையி லெண்ணுவீரே.
4. மறுநாள் யேகாதசி தானென்று மனதினி லெண்ணுவீரே
மற்றொன்றும் புசியாமல் திருத்துழா தின்று மாயனைத் துதிப்பீரே.
5. மூன்றாம் நாளில்சூரிய வுதயம் முன்னேஸ்நா னஞ்செய்து
முறைப்படி விரதம்யாவரும் செய்து முகுந்தனையே துதிப்பீர்.
6. நானிலத்தோரே ஏகாதசியில் நல்லதுவா தசியில்
நாரணன் விரதமானதின் பிறகு நலமுடன் தூங்காதீர்.
7. இராஜனுக்கினை ஆகுதுமிதுதான் நன்றாய் அறிவீர்கள்
நற்கதிதந்திடும் ஏகாதசிவிரதம் நயமுட னிருப்பீரே.

நிகழ்ச்சி. [அந்தப் புரத்திலிருந்த உருக்குமாங்கத மஹாராஜன் தமுக்கு சத்தம் கேட்டு ஏகாதசி விரதஞ்செய்யப் புறப்பட்டவுடன் மோகனாங்கி தடுத்தல் இருவருக்கும் தர்க்கம்.]

ஆறுமுகவடி வேலவனே-என்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம் ரூபகம்.

1. ஏதுமிகவிரைவாக யிதை விட்டெழுந்தது சீமானே அதை
இன்னதென் றெனக்கு நன்னயமா யியம்புவீர் பூமானே

2. பார்தக்கீர்க்கு மேகாதசி யித்தினம் பைந்தொடியே பாராயதோ
பறையறிவிக்கிறார் யான்சென்று வருகிறேன் பாவையே நீதேறு

3. ஏகாதசியென்றா லெந்தனுக்கதனாலே தம்வருவதில்லை மதன்
இம்சையை தீர்க்காது மன்னவாவுமை இனியான் விடுவதில்லை

4. ஆகாநீ சொல்வதை பார்த்தாலோமெத்த அழகாகத்தோணுதே இந்த
அன்னீதங்கேட்கவே எந்தன்மனது அநேகமாய் நாணுதே

5. மோகம்தீர்க்காமல் நீர் ஏகுவதிப்போ முறையல்ல ராஜனே இந்த
மோசஞ் செய்வீரென்று முந்தியறியாது முழுஆசை கொண்டேனே

6. தேகம்நோகுதே தேவியே நீயிப்போ செப்பிடும் வார்த்தையாலே எனை
சீக்கிரமாகவே போகவிடுவாய் சிங்கார ரூபியாளே

7. நீதிகள் பலவாறெடுத்துச் சொன்னாலும் நினைத்துப்பாரேனே இந்த
நேரத்திலெந்தனை சேராதுநீர் வெளிபோகவுங் கூடேனே.

27. மோகனாங்கி சொல்லுதல்.

கவி.

மன்னவா வென்னைத் தாங்கள் வதுவைசெய் வதற்குமுன்னஞ்
சொன்னதை மறந்தேயிந்த துரோகமே நினைக்கலானீர்
கன்னியாள் மனங்களிக்க கலந்திட வந்திடாமல்
இன்னந் தாமதமே செய்தா லேந்திழை சகிக்கமாட்டேன்.

28. உருக்குமாங்கத மஹாராஜன் கூறுதல்.

பாராமுக மேனையா-என்ற மெட்டு

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

1. கோபம் வைப்பதாகுமா எந்தன்மேல் பெண்ணே
கோபம் வைப்பதாகுமா

அநுபல்லவி.

2. பாபமகற்றும் பத்ம நாபன் விரதஞ் செய்ய
போவதற்கு மனஸ் தாபம் வைத்திடும் பெண்ணே
பாராய் பதிலெனுக்குத்
தாராய் எந்தனை நீயும்
வேறாய் நினைத்து அவ
தூறாய் பேசிடுங்கண்ணே (கோ)

3. ஏகாதசிக்கு யானும் போகக்கூடாது யென்று
ஆகாநீ சொல்வதழ காகாது போடிபோடி
கொஞ்சம மாகிலு முந்தன்
நெஞ்சம் இறங்கிடாமல்

வஞ்சர் தனையே கொண்டு
பஞ்சை புத்திபடைந்து. (கோ)

4. தேகம் நிலைப்பது சங் தேகம் அதனாலிந்த
ஏகாதசிக்கு யானும் போகவேணு மென்றிப்போ
சொல்லி வந்ததை நீயுந்
தள்ளி எந்தனைச் சேர
கள்ளி நினைந்து மிக
துள்ளி துள்ளிப்பேசியே. (கோ)

29. உருக்குமாங்கதனுக்கும் மோகனாங்கிக்கும் தர்க்கம்.

பட்டாபிஷேகம்-என்ற மெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

(மோகனாங்கி.)

1. இன்னோத்தி லெனை தன்னந்தனியாய் விட்
டென்னமாய் போகதான் மன்னவரே நீரும்
நன்னயமாய் நினைத்தீர் அன்னாளிலே
சொன்னமொழி மறந்தீர்
ஏதுபிது வோதுவது நீதியல்லக் காதலைத் தீருமன்றா (இ)

உருக்குமாங்கதன்.

2. கன்னியே நீதியாய் சொன்ன தெல்லாம் மறந்
தென்னையணைந்திட இன்னோத்தில் நீயும்
எண்ணித் துயரடைந்தாய் இதற்கோ நீ
பெண்ணாக வந்தடைந்தாய்
காதலியே பேதகமாய் ஓதுவது பாதகஞ் சேருமடி. (க)

மோகனாங்கி.

3. சிந்தை மகிழ்வாக எந்தனைச் சேராத
தொந்தரவாலையா னிந்த வேளையி
லந்தோ துயரடைந்தேன் இப்பேதை
வந்து வுமையடைந்தேன்
சித்தசன் கணையாலே உத்தமனே மெத்த துயரடைந்தேன் (சிந்)

(உருக்குமாங்கதன்)

4. சொந்தமாய் வைகுந்தம் தந்திடுந் தினத்தில்
சிந்தை மகிழ்வாக யெந்தனைச் சேர்ந்திட
எந்தனிதந் அணிந்தாய் யதிகாரீ
வந்துயெனை யடைந்தாய்
சோகமிக ஆகுதடி சோகையேநீ போகுப்படி செப்புவாய்

30. மோகனாங்கி கூறுதல்.

வேலனே இந்த வீணனை ஏன் படைத்தாய்-என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

1 நேசனே என்ன நீதியைப் பேசவந்தீர் எந்தன்
நெஞ்சம் மகிழ்வாகயின்று கொஞ்சிவிளை யாடிடாமல் (நேச)

2. ஆசையோடு என்னை யாலிங்கனஞ் செய்து
அதிநேசமா யிருக்காம லித்ததியேகுவே னென்றுசொன்ன.

3. என்னைவிடுவ தில்லை யென்றுத் துணிந்து
முன்னேநீர் சொன்ன மொழிதனைக் கடந்து
முன்னேரத்தி லேகா தசியை நினைந்து
எதிராளியினிடம் பேசிடும் முறை போலவே
மிக ஏசிடும் (நேச)

4. தென்றல் காற்றுவீசுந் திவ்வியர் தனைப்பாரும்
இன்றெனக்கு மதன் இம்சை யெல்லாந்தீரும்
அன்றேல் எனக்கு அளித்த வரந்தாரும்
அதுவேயில்லை யெனவே மொழிந்திடுவீராகில்
வெளி செல்கிறேன். (நேச)

---

31. உருக்குமாங்கத மஹாராஜன் கூறுதல்.

சோமசேகர னருளும் பாலா-என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

1. வாசுதேவ னுக்குகந்த நாளிற் கூடி வெகு
நேசமாய் இருப்பது கூடாது போடி

2. பாசமாய் மணந்தேனடி யுன்னை யுன்னை விரதம்
நாசஞ் செய்யவோ நினைத்தாய் பெண்ணே பெண்ணே மிக
தோஷம் வந்து சேருமடி சொன்னேன் சொன்னேன் உந்தன்
ரோசமும் செல்லாது எந்தன் முன்னே பெண்ணே. (வாசு)

3. மோசக்காரியென்று அறிந் தேனே நானே பரி
காசவார்த்தை சொல்லாதேயென் னிடந்தானே முன்பு
ஆசையாய் கொடுத்திட்ட வரமும் யானே இதோ
கூசாமல் கொடுத்திவேன் கேட்பாய் பெண்ணே, (வாசு)

---

32. மோகனாங்கிக் கூறுதல்.

கவி

தேசங்க ளாளு மன்னா சித்தஜன் கணைதீர்க்காமல்
மோசங்கள் மிகவும் செய்தீர் முந்திதா னெனக்கு வும்மால்
கேசவன் சாக்ஷியாக கிடைத்திட்ட வரமிப்போது
ஆசையாய் சேரவேண்டி அடியாளுங் கேட்கின்றேனே.

---

33. உருக்குமாங்கத மஹாராஜன் சொல்வது.

மாணேசற்று நீ நில்லடி-என்ற மெட்டு.

1. மோகம் அடைந்த நீர்மூடி ஏகாதசியில்
போகங் கூடாது நீபோடி குடிகேடி
மேகவண்ண னருளால் போகும் பாவங்களென்று
தோகையேயானும் வெகுவாக சொன்னதைவிட்டு (மோ)

(மோகனாங்கி)

2. ஏகாதசி பெரியதோ சத்தியம் மறந்
தேகுவதும் உரியதோ மன்னா இப்போது
நோகுது மென்தன் மனம் போகுவது தகாது
மோகந்தீர்ப்பதற் காகுங் காலத்தை விட. (ஏ)

(உருக்குமாங்கதன்)

3. நீலியென்று அறிந்தேனே பொல்லாத ஜெக
ஜாலி யென்றுந் தெறிந்தேனே இப்போது தானே
ஞாலத்தின் மீது திருமாலினிட பக்தனைத்
தாலிக்கட்டிக் கொள்வதாய் போலிவார்த்தை சொன்ன. (நீ)

(மோகனாங்கி.)

4. வாலிபதிசை போகுதே மதன்கணையி
னாலே யென்மனம் நோகுதே வீணாக இப்போ
வேலைசூழ் புவியாளுஞ் சீலனே இது நல்லக்
காலங் கூடிடலாம் என் லோலனே வந்திடுவாய். (வா)

(உருக்குமாங்கதன்)

5. சூதுகள் கற்றக் கோதையே என்தன் இரு
காதை மூடினேன் பேதையே வெகுவாகவே
ஆதியிலே என்னிடத்தி லோதிய தெல்லாம் மறந்து
சாதனையாய் சேரச்சொல்வ தேதே தெரியவில்லை. (சூ)

(மோகனாங்கி)

6. நீதிகள் கேட்கவில்லையே உம்மிடத்தில் நான்
வாதுகள் தரவில்லையே இவ்வேளையிலே
போதும் போதுமே மதன் வாதை தீர்த்து அப்பால்
வேதசாஸ்த்திரத்தை ஓதுவீ ரெந்தன் மன்னா. (நீ)

---

34. உருக்குமாங்கத மஹாராஜன் சொல்லுதல்.

கவி.

ஹரிதின மானதாலே யன்புடன் கலந்துபேசச்
சரியல வென்பதெல்லாந் தையலே மறந்துமிப்போ
பிரியமாய் சாரச்சொன்ன பேதையே விரதஞ்செய்து
திர்வாரங் கழித்துவாரேன் சிந்தையு மகிழுவாயே.

---

35. மோகனாங்கிப் புலம்பல்.

மதிப்பெல்லாங் கெட்டது விதிப்படி விட்டது-என்ற மெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. எரியுதே யென்வயிர் அறியாரே மனத்துயர்
என்ன நான் செய்குவேன் தெய்வமே தெய்வமே தெய்வமே

2. பிரியமாய் கூட்டிவந்து அறியாரைப்போல் சினந்து
பேசுவது ஞாயமோ மன்னவா மன்னவா மன்னவா

3. சதிகாரியென்று யென்னை மதியாமல் இவர்பேச
தையலாள் என்ன செய்தேன் தெய்வமே தெய்வமே தெய்வமே

4. கெதியில்லாதவளென்று அதர்மஞ் செய்தாரே யின்று
கேழ்ப்பார்கள் யாருமில்லையோ தெய்வமே தெய்வமே தெய்வமே

5. சத்தியஞ் செய்துதந்து இத்ததியில்லை யென்று
சாற்றுவதும் நீதியோ மன்னவா மன்னவா மன்னவா

6. இத்தரணி வேந்தரே மெத்தப் பிசகுசொன்னால்
இனியார் கேட்கப்போறார்கள் தெய்வமே தெய்வமே தெய்வமே

நிகழ்ச்சி. [மோகனாங்கி அழுகசத்தங்கேட்டு தருமாங்கதன் வந்து தன் சிற்றன்னையைத் தேற்றுதல்]

36. இருவருக்கும் தர்க்கம்.

மலடிவயிற்று மகன்போலே-என்ற மெட்டு.

தருமாங்கதன்.

1. அன்னையே பாதந்தொழுதேனே-உனக்
கின்னதுய ரென்பது தானே-எனக்
கறிவித்தாலிப்போது யானே-அதை தொலைப்பேனே.

(மோகனாங்கி.)

2. என்னரும் மகனே நின் தந்தை-முன்
சொன்னவரங் கேட்க நிந்தை-செய்து
ஏசியதாலேயென் சிந்தை-மிக கலங்குதே.

(தருமாங்கதன்.)

3. தந்தையு மவ்விதஞ் சொல்லாரே-அவர்
முந்தி மொழிந்ததை மறவாரே-உயர்
சத்தியத்தைவிட வொப்பாரே-அதை தெரிவிப்பாய்

(மோகனாங்கி.)

4. முந்தி கொடுத்த வரந்தானே-அவர்
தந்திடமாட்டே னென்றிடத்தானே-யான்
முழுதுயரையுங் கொண்டேனே-என்மைந்தனே.

நிகழ்ச்சி. [மோகனாங்கி கோபம் தணியாமலிருந்ததினால் தருமாங்கதன் திரும்பிவந்து தன்தாயார் சந்தியாவளியை அனுப்பி அவளைத் தேற்றச்செய்தல் சந்தியாவளி மோகனாங்கியிடம் கூறுதல்.]

செந்தின்மாநகர்வாழ் கந்தனை தனிரு-என்றமெட்டு.

இராகம்-கானடா-தாளம் ரூபகம்.

1. சுந்திரவதியே
யுந்தனைப்பார்த்திட
சோருதே என்
கெஞ்சமே இங்கு
யாரு செய்தார்
வஞ்சமே இனி
துக்கமெல்லாம்
பஞ்சமே செய்யத்
தேடியிங்கு வந்தேன்
மோடிதனை விட்டு
தெரிவிப்பாயே
கொஞ்சமே

2. எந்தன் மீதில் மனஞ் சந்தோஷமாய் வைத்து
இன்னதென்று சொல்லுவாய் எந்தன்
முன்னே நீயும் விள்ளுவாய் துக்கம்
எல்லாம் இப்போ தள்ளுவாய் துன்பம்
ஏதுமில்லாமலே பாது காத்திடுவேன்
இன்பத்தை யேகொள்ளுவாய் (ச)

37. மோகனுங்கி சத்தியாவளியிடம் சொல்வது

கவி.

என்னை யன்புடனே கேட்ட யெழின்மிகு மாதேகேளாய்
மன்னவர் யெனக்கு முன்னம் மனதாரக் கொடுத்தவாக்கு
பின்னமாய் போனதாலே பெரியதோர் துயரடைந்தேன்
சொன்னதா லாவதென்ன சோருதேன் ஆவிதானே.

38. சந்தியாவளி மோகனுங்கிக்குப் புத்தி கூறுதல்

பாகிரதத்திரீ வேளையில் என்ற மெட்டு.

1. நாயகனே நம்தெய்வ மென்றுதான்
நான் மறைகளும் வோதும் இதை
நம்புவாயே யெப்போதும் பின்னல்
நடவாது வொரு தீதும் மோக
னுங்கியே வீணாய் யேங்கியே மனதில்
நாட்டாதே வொரு சூதும்

2. தாய்வயிற்றினில் பிரந்திடா வழி
தன் கணவனே யாகும் இது
சாஸ்திர விதி யாகும் துயர்
சற்றும் நிற்காமல் யேகும் பிரிய
தையலே இதை மெய்யாய் நம்பினல்
சகலபாபமும் போகும்

3. பாதகந் தீர்க்கும் ஏகாதசிக்குப்
பங்கம்நீயுஞ் செய்யாதே மனம்
பகைத்திடவே வையாதே வெகு
பாபத்தையுந் தேடாதே இன்ப
பாவையே யுந்தன் கோபத்தால் மிக
பரதவித்து வாடாதே.

4. நாதன் மனது கோணினவர்க்கு
நரகமே மூடி வாகும் புவியில்
நல்ல பேருமே போகும் பெரியோர்
நவில்கின்ற விதி யாகும் பிரிய
நங்கையே யானுஞ் சொல்வதைக் கேளாய்
நாயகன் தெய்வ மாகும்.

5. கற்புடையதோர் மாதர் தங்கள்
கணவனை வெறுக்காரே சற்றுங்
கருத்தில் நினைத்துப் பாரே யாருங்
கண்டுகொண் டாடுவாரே இந்த
காசினியோர்கள் பூசிப்பதற்கு
காட்டினேன் மனந்தேறே.

---

39. மோகனாங்கி பதில் கூறுதல்.

மஞ்சுநிகர்க் குந்தளமின்னே-என்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1. சொன்ன மொழியானுங் கேட்டேனே மெய்யாகுமது பொய்பேசி [டவே
சுந்தரி பொருக்கமாட்டேனே மனஞ்
சோருதே இந்த பாரின்மேலினி
யாரும் நன்மொழி கூறிடார்களோ
தோகை யானடைந்தேன் தொல்லையே
தப்பித வார்த்தை செப்புவாரென்று
சிந்தையில் நினைக்கவில்லையே.

2. முன்னம் மொழிகார்க்கா விட்டாலுஞ் சத்தியங் காக்க இத்தறி [யான்
மொழிந்திடுவேன் சேராவிட்டாலும் மிக
முகவசீகர முள்ள மகன்தலை
அகமகிழ்ந் தெனக் களித்திடிலிந்த
முழுதுயரும் யானுக நீக்குவேன்
மெல்லியரே எள்ளளவில்லா
மோடியும் நொடியிற் போக்குவேன்,

காட்சி. [சந்தியாவளி மூர்ச்சை அடைந்து தனக்குள் தேறிக் கொண்டு அரண்மனை வருகுதல்; தன்மகன் தர்மாங்கதனிடம் தெரிவித்தல்.]

கவி.

என்னரும் மகனேகேளா யேந்திழை மோகனாங்கி
சொன்னதைக் கேட்டியானுந் துக்கமோ மிகவுமானேன்
மன்னரும் முன்னந்தந்த வரத்திற்காய் மகனே யுந்தன்
சென்னியைக் கேட்கின்றாளே செல்வமே யென்ன செய்வேன்.

என்தாய் வயிற்றினில் என்றமெட்டு.

(தருமாங்கதன்.)

1. என்தாயே நீயுஞ்சும்மா இதற்கோ துயரடைந்தாய்
இந்தஜென்மஞ் செய்தபலனை இப்போதுதானே அடைந்தாய்

(சந்தியாவளி.)

2. அன்புடைய யென்மகனே ஆவியது சோருதப்பா
அரும்பாவி செய்தவஞ்சம் யாருந்தான் மனஞ்சகிப்பார்.

(தருமாங்கதன்.)

3. மாயனருளால் வைகுந்தத்தை மாதாவே நாம்பெறலாகும்
மனங்கலங்கி யெனைநினைந்து வாடுவது வீணேயாகும்.

(சந்தியாவளி.)

4. பாலும்பழ மூட்டியுன்னைப் பரிவுடனே வளர்த்தேன்
பட்சமுள்ள யென்மகனே பாவியெப்படிக் கொடுப்பேன்.

(தருமாங்கதன்.)

5. மண்ணிலினி யானிருந்தால் வந்திடும் நற்பலனேது
மனதிலே வருந்துயரை மாற்றிடுவீ ரிப்போது.

(சந்தியாவளி.)

6. கண்மணியே யுன்னைப்பெறக் கனதவஞ் செய்தேன்பாலா
காதகியும் எமனாகக் காத்து இருந்தாளோ சீலா.

(தருமாங்கதன்.)

7. இந்தசரீரந் தானம்மா இரும்போ கல்லோ நீ சொல்வாய்
இறப்பது நிச்சயமென் றெல்லீணரியே துயர்விடுவாய்.

(சந்தியாவளி.)

8. சிந்தையது இந்தவேளை செல்வமே கலங்குதே
திரிநூறு நாள்சுமந்து தேகமிக நடுங்குதே.

40. தருமாங்கதன் சொல்லுதல்.

மன்றுளாடியவா-என்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

1. என்றும் நிலையாதேகம் என்றும் நிலையா
இன்றுயிருப்பது திண்ணம் என்று நினைத்திட இல்லை. (எ)

அநுபல்லவி.

2. நெருப்பிலுடல் வெந்து நீறுகுமல்லவா
நினைத்துப் பாராது வீண்பாசத்தா லல்லவா
மறப்பது பொல்லாது மாய்கையா லல்லவா
மனதில் நினைத்தாலிந்தக் கனதுயரெல்லாமேகும். (எ)

3. வரும்விதி வழியில் தங்காதெனும்மதி
மறந்துதான் போக லாமோ நீர் இத்ததி
திருமாலருளாலே சேரலாம் நற்கதி
திருவடி தொழுதே சொன்னேன் தருகுவீரெனையே அம்மா. (எ)

41. சந்தியாவளி கூறுதல்.

பாலனிறந்தவிடம் இதுதானோ-என்றமெட்டு.

இராகம்-சகானா-தாளம்-ரூபகம்.

1. பாலாவுனைக் கொல்ல பாவி சகிப்பேனோ
ஞாலமீதிலேயினி நானும் இருப்பேனோ

2. காலனாக வந்தாளே கண்மணி யென் செய்வேன்
சிலாவுந்தனிட சிரசை யெப்படிக் கொய்வேன்

3. பத்துமாதந் தாங்கியே பாலாவுனைப் பெற்றேன்
இத்தரணி யாளுவாய் என்று மகிழ்வுற்றேன்

4. கத்திக்கு இரைசெய்ய கருதுமோ யென் நெஞ்சம்
சத்துருவாய் வந்தாளே சரியாமோ இவ் வஞ்சம்.

42. தருமாங்கதன் சொல்லுதல்.

கவி.

அன்னையே யானும் முன்ன மருந்தவஞ் செய்ததாலே
என்னுட தலையைக் கேட்டா ளிதற்குமேன் வருத்தங் கொண்டீர்
மன்னும் காரணனுல் முத்தி வருகுமே யதனுலெந்தன்
சென்னியைத் தருவீருந்தன் சேவடிப் பணிந்தே னம்மா.

நிகழ்ச்சி [சந்தியாவளி தன் மகனை அழைத்துக்கொண்டு மஹா ராஜனிடம் போய் தெரிவித்தல்.]

கவி.

நாதனே யென்ன செய்வேன் நங்கையாள் மோகனங்கி
ஓதிய வார்த்தை சொல்ல உள்ளமும் நோகுதையா
தீதுவொன் றறியா மைந்தன் சிறந்தனை விருப்பமாகப்
பாதகி கேட்கிறுளே பாவியானிதற்கோ பெற்றேன்.

---

43. உருக்குமாங்கதன் சொல்லுதல்.

கவி.

ஹரிஹரீ வாசுதேவா அரும்பாவி மோகனங்கி
பெரியதோர் வஞ்சம் வைத்தென் புதல்வன்றன் சிரங் கேட்டாளே
எரியுதே வயிறப்போ தெவ்விதம் மனந்துணிந்து
சரியெனச் சொல்லியீவேன் சதுர்மறைப் புகழும் நாதா.

நிகழ்ச்சி [உருக்குமாங்கத மஹாராஜன் மூர்ச்சை அடைந்து விழு கிறுர். தர்மாங்கதன் தேற்ற எழுந்து அயரப் படுகிறுர்.]

முத்துக் குமாரையனே-என்ற மெட்டு.

பல்லவி.

1. மெத்தத் துயராகுதே சித்தம் மிக நோகுதே. (மெத்)

அநுபல்லவி.

2. இத்தரணியாள வுத்தமனைவுனைப்
பெற்றேனடா பாலா புத்தியுள்ள சீலா—அப்பா (மெ)

3. புத்திரனேவுனைக் சத்தியாலே யானுங்
கொத்தனம் வருமா சித்தஞ் சம்மதந்தருமா—அப்பா (மெ)

4. ஞாலமீதிலுள்ளோர் பாலனைப்பெறவே
சாலத்தவஞ் செய்வாரே சீலனைமே மகிழ்வாரே— அப்பா (மெ)

5. காலமுடிந்திறந்தாலும் பெற்றோர் மென்
மேலுக்குயர்வைப்பாரே நாற்கற்றோரும் மனம் ஒப்பாரே— அப்

44. தருமாங்கதன் கூறுதல்.

குருவானவா வாரும் தாயுமானவா-என்ற மெட்டு.

இராகம் தேசிகதோடி-தாளம் ஆதி.

பல்லவி.

1. அழ—லாகுமா ஆவிசோர லாகுமா
ஹரி திருவடி பெறும்வழி மறந்தேனைநினைந்து நீர்புலம்பி அழலா

2. தேகம் நிலை நில்லாமல் செல்லுமென்பதறிந்தும்
சித்தங்கலங்கியே மெத்தத்துயரோடு
இத் தருணத்திலே கத்தியே அழ—லாகுமா

3. மாநிலத்தில் சிலநாள் வாழ்ந்திட்டாலும் ஒருநாள்
மரணம்வருமென் றறிந்திருந்தநீர்
மறந்து துயரை யடைந்து அழ—லாகுமா

4. வானவர் கொண்டாடும் மாயன் மேலாணைவைத்து
வாக்குத் தந்ததைக் காக்கும் பொருட்டு
ஊக்கமதையே நோக்காமல் அழ—லாகுமா

45. உருக்குமாங்கதன் கூறுதல்.

தையலே சையோகம் செய்யா-என்றமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

1. உந்தன் தலைதனைத் தந்திடவே யெந்தன்
உள்ளம் சம்மத மாமா—பெற்றப்
பிள்ளையைக் கொல்லப் போமா (உந்)

அநுபல்லவி.

2. அந்தமுள்ள மகனே அவனிபுகழ் சுதனே
அந்தகனாகவே வந்தாள் மோகனங்கி
அரும்பாவி செய்த பாபமோ—இந்தப்
பெரும் புவியோர் சாபமோ (உந்)

3. சிந்தைத் துயரானேன் செல்வமே யென் செய்வேன்
தேடி யெணைவுற வாடி குடிகேடி
செப்பினு ளிவ்வஞ்சமே—இகற்
கொப்புமோ என் நெஞ்சமே. (உந்)

4. இந்த சதிகனை யெண்ணியே யெந்தனையே
ஏமாற்றி னாளே பாவி மோக னுங்கி
எங்குதே யென்ன செய்வேன்—வினை
நீங்கி யெப்படி உய்வேன் (உந்)

46. தருமாங்கதன் சொல்லுதல்.

எனை ஆண்டவா-என்ற மெட்டு.

இராகம்-சிந்துபைரவி-தாளம்-ஏகம்.

1. இது ஞாயமா நாளும் நிலைத்தக் காயமா
நாசமாகும் வுடல்மேலாசை மேவிடுவது ஞாயமா (இது)

2. தீயபாவங்களினி தீர்ந்து நற்பதவிதனைச்
சேரலாம் சேரலாம் சேரலாம் சேரலாம்
தெரிந்து மிருந்தும் மறந்து மிகவே
வருந்தி யெனையே நினைந்து புலம்ப. (இது)

3. சேயன் பிதாவின் துயர் தீர்த்திட நற்கதிதனைச்
சேருவான் சேருவான் சேருவான் சேருவான்
சித்தம் மகழ்வொடு இத்தருணஞ் சிரங்
கொத்திக் கொடுக்காது மெத்தக்கலங்கிட. (இது)

4. மாயவுலகுதனில் வாழ்ந்தோர் வெகுபேர்வினைக
மாண்டனர் மாண்டனர் மாண்டனர் மாண்டனர்
வருத்தம் விடுத்து சிரத்தை அறுத்து
கொடுத்து விரதம் முடித்திடாமலே. (இது)

47. உருக்குமாங்கதன் கூறுதல்.

அம்மாயென் நல்லதங்கா-என்ற மெட்டு.

1. மைந்தன் தலையைவெட்ட மானிலத்திலே துஷ்ட
மனிதருஞ் சம்மதியாரோ என் மைந்தா மைந்தா மைந்தா [தா

2. பைந்தொடி மோகனுங்கி பண்ணிய சூதால் ஏங்கி
மாதவித் திடலானேனே யென் மைந்தா மைந்தா மைந்தா மைந்

3. கடந்தஞானியும் மைந்தர் காதல் வெறுக்காமென்று
கதைதனைக் கேட்ட தில்லையா யென் மைந்தா மைந்தா மைந்தா
[மைந்தா.

4. மடந்தைகளை நம்பினால் வருந்துயர் தானென்ற
வார்த்தை நிசமாய் போச்சுதே என் மைந்தா மைந்தா மைந்தா
[மைந்தா.

---

48. தருமாங்கதன் கூறுதல்.

கவி

தந்தையே நாமுமிந்த ஜகமதி லினிமையாக
எந்தநா ளிருந்திட்டாலு மிறப்பது நிசமே யல்லால்
மைந்தன்மே லாசைவைத்து வாடுவதுமக்கு நன்றோ
சிந்தையும் மகிழ்ச்சியாக சிரந்தனைக் கொய்குவீரே.

---

49. உருக்குமாங்கதன் கூறுதல்.

ஆதியே நந்த கோபாலா-என்ற மெட்டு.

1. ஆவிசோருதே மகனே அவனிபுகழ் சுதனே
பாவிவஞ்சத் தாலேபாலா பதருதே மனஞ்சீலா. (ஆவி)

தருமாங்கதன்.

2. சாவது யில்லையோ அய்யா தவிப்பது நலமோ துய்யா
சிவன் போகாமலே தானே சீவித்திருப் பேனோ நானே. (சா)

உருக்குமாங்கதன்.

3. இந்தப்புவி யாள்வா யென்று
எண்ணியது மெல்லாம் நின்று
அந்தோவுனை யானே கொன்று
அரும்பாவி தரவோ நன்று, (ஆவி)

தருமாங்கதன்.

4. மைந்தனென்று யெண்ணி யெண்ணி
வாடலாமோ மனது குன்னி
சந்தோஷ முடனே வெட்டி
தருவதற் கேனோ அட்டி. (சாவ)

உருக்குமாங்கதன்.

5. சிந்தையது கலங்குதே
தேகமிக நடுங்குதே
பந்த பாசமே தங்குதே
பாலா கண்ணீரும் பொங்குதே. (ஆவி)

தருமாங்கதன்.

6. தந்தையே வீணாய் மயங்கி
தனயனாலே தயங்கி
இந்தவிதம் நீரிருந்தால்
என்னமாய் வினையொழியும். (சாவ)

நிகழ்ச்சி. [மோகனாங்கி உருக்குமாங்கதனிடம் சென்று தருமாங்கதனைக் கொல்லாமல் தன்னை சேரும்படி கேழ்க்கிறாள்.]

சர்ஜ்ஜனர்கள் கொண்டாடும்-என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

1. நற்குண மிகுந்தயெந்தன நாதாயிது ஞாயமோ
ஞாயமோ என்ன ஞாயமோ.

அநுபல்லவி.

2. சற்குணம் பூண்டவரே தாணியை யாள்பவரே
சகியாளுடன கூடி சுகமா யிருக்காதது. (நற்)

3. மாதர்சுகம் பெரிதாகும் மீதிநர்டம் வீணையாகும்
வந்து யெந்தனை டணைந்து சுகித்திடுவீர். (நற்)

4. பேதையுடன் வந்து சேர்ந்து பூதலந்தனிலே வாழ்ந்து
பெரும்புக முடையலாக திருப்பியே வந்திடுவீர். (நற்)

---

50. உருக்குமாங்கத மகாராஜன் சொல்லுதல்.

வேலவனே இந்த வீணனை ஏன்படைத்தாய்-என்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி தாளம்-ரூபகம்.

பல்லவி.

1. நீவியே என்ன நீதியைப் பேசவந்தாய்—சற்று
நினையாமலே மனந்துணிந்தே எனதுமகன் சிரமேகேட்ட. (நீ)

அநுபல்லவி.

2. வேலே சூழும் புவியாளும் மகன் தலே
விரைவாகவே தந்துஹரி விரதம் முடிந்திடவே சொன்ன. (நீ)

சாணங்கள்

3. போலி வார்த்தையைப் புகன்றசண்டாளியே
ஞாலமதிலே நமனனுகூலியே
கேலிப்பேசக் கால மல்ல ஜெகஜாலியே
கெடுதல் வழிகுடியே கொண்டு அடுத்துஇங்கு கெடுக்கவந்த (நீ)

4. மூலநாயகனால் முத்தி வருமென்று
சாலவேயான் முன்னஞ் சாற்றின தற்கின்று
கோலமுடன் யெனைக் கூடிடுவா யென்று
குணமேயுள்ளதுணைவியைப்போல்எனைஏமாற்றநினைத்துவந்த (நீ)

நிகழ்ச்சி. [மோகனுக்கு விலகிப்போகிறாள். தருமாங்கதன் தன் தகப்பனிடம் தெரிவித்தல்.]

சோமசேகர னருளும் பாலாவேலா-என்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம் ஆதி

பல்லவி.

1. தாமதஞ் செய்வது நன்றோ அய்யா அய்யா—வெகு
கேமமா யிருந்த தெல்லாம் பொய்யா பொய்யா. (தா)

2. கேவிசூழ் வுலகமதில் வாழ்ந்து வாழ்ந்து குடும்ப
ஏமமதில் என்னாளுமே வீழ்ந்து வீழ்ந்து மிக
தீமைதரும் ஆசைதனில் சூழ்ந்து சூழ்ந்து நமது
சாமிபதஞ் சேர்வது தனைமறந்து. (தா)

3. எமனினி மேல்பிடித்து செல்லுவானோ நரகில்
தீமையை அனுபவிக்க தள்ளுவானோ நல்ல
க்ஷேமமுண் டாகும் வழி தடுப்பதேனோ அந்த
பூமனையின் றேன்பதம் மறக்கப் போமோ. (தா)

---

51. உருக்குமாங்கத மஹாராஜன் மகன் தலையை வெட்டப்போது கூறல்.

செந்தின் மாநக ரந்தனில் மேவிய-என்ற மெட்டு.

(கடைக்குறை.)

இராகம்-தேசிகதோடி-தாளம் ரூபகம்.

1. தெய்வமே முந்தி ஜென்மத்திலே யானும்
செய்தேனோ பெரும்பாவம் யாரை
வைத்து அடைத் தேனோசாபம் இந்த
ஜெகங்கள் மெச்சியே புகழு மோங்கிடும்
மகனைவெட்டிட வருத்திட்டாயோ. (தெ)

2. தையலாளுக்கு இந்த நினைப்புதான்
தந்ததுவுன் செயல்தானோ யாரை
தொந்தரவுமுன் செய்தேனோ நீதி
தங்க பிறந்திட்ட திங்கள் வதனனை
இங்கு யான்வெட்ட அங்கம் பதருதே. (தெ)

3. இன்னிலம் மாளும் எந்தன்மகன் தலை
என்ன விதமாய்க் கொய்வேனோ இனி
மண்ணினில் யானும் உய்வேனோ மனம்
ஏங்குதேதுய ரோங்கு தேவொரு
தீங்குமில்லா தர்மாங கதனுகும், (தெ)

4. எண்ணிலா பாபம் முன்னஞ்செய் திட்டேனோ
இந்துயருக்கு ஆளானேன் அந்தோ
சித்தங் கலங்கிட லானேன் பாவம்
ஏதுமே அறியா மகன்சிரஞ்
சேதிப்பதற்கு மாதுவோதினள். (தெ)

11-வது சீன்—ஸ்ரீ பகவான் தரிசனம்.

நிகழ்ச்சி. [உருக்குமாங்கத மஹாராஜன் தருமாங்கதனை வெட்டப்போகுந் தருவாயில் ஸ்ரீமன் நாராயணன் பிரசன்னமாகி வரமளித்தல்.]

கவி.

உருக்கு மாங்கதனே யுந்த னுள்ளத்தி னுறுதி யாலே
திருவுள மகிழ்ந்து வந்து சேவையுந் தந்தோம் நாமே
தருமாங் கதனு நீயுஞ் சந்தியா வளியு மென்றன்
பெருமைசேர் வைகுந் தந்தைப் பெற்றிட வருள்பு ரிந்தோம்.

நிகழ்ச்சி [புஷ்பக விமானத்தில் உருக்குமாங்கதன் சந்தியாவளி தருமாங்கதன் இவர்கள் அமர்ந்து வைகுந்தம் சேர்வது.]

வாழி.

செந்திரு மார்பன் வாழ்க திருமகள் தானும் வாழ்க
இந்துதன் குலத்து மன்னன் எழில்ருக் மாங் கதனும் வாழ்க
சந்தியா வளியும் வாழ்க தருமாங் கதனும் வாழ்க
இந்தநூ றற்படித்தோர் கேட்பரும் வாழ்க வாழ்க.

சுபம்! சுபம்!! சுபம்!!!

Q22:417
X13
181666

நகரவாசிகளுக் கேற்ற நாகரீக நாவல்
அடிக்கடி ஓயாச்சிரிப்பை விளைவிக்கக்கூடிய
உரிய நாவல் இது ஒன்றே.

புல் புல் சுந்தரி
ஜில் ஜில் மைனர் அல்லது
தாசியின் தடபுடல்.

வெண்பா.

பாலப் பருவத்தே பாக்கியமுற்ற மைனர்களின்
கோலத்தை யேபுகழ கொப்பெனவே—சீலமுள்ள
புல்புல் சுந்தரிசரிதை பூரித்து கேட்பவர்க்கு
ஜில்ஜில் மைனர்கதையே சீர்.

கதை சுருக்கம்:—புல்புல் சுந்தரியும் தாய்க்கிழவியும் சேர்ந்து செய்யும் அட்டகாசங்களும், தற்காலத்து தாசிகளின் நடவடிக்கையும், மைனர்களிடம் உள்ள பொருள்பறித்து ஒட்டாண்டியாக்கி விரட்டி ஓட்டுவதும், அதற்கேற்ற கட்பாளர்களை சகவாசஞ் செய்து அந்நிய நாட்டில் இருக்கும் மைனர்களை யெல்லாம் சரிப்படுத்தி அவர்களின் பொருளெல்லாம் அபகரிப்பதும், புதுச்சேரி சென்று புல்புல் சுந்தரி ட்ராமா ஆக்டாக இருந்து அங்குள்ள மைனர்களிடம் தனது ஒய்யார நடையுடை பாவனைகளால் அவர்களை மயக்கி பொருள் பறிப்பதும், ஓட்டலில் சென்று டீ, காப்பி முதலியதுகளை சாப்பிட்டு ஒருவருக்கொருவர் புல்புல் சுந்தரியையே நினைந்து அகங்காரங் கொள்வதும், உடனுக்குடன் பஸ்ஸில் ஏறி பீச்சு ஓரங்களிற்குச் சென்று காற்று வாங்கி அங்குள்ளவர்களை யெல்லாம் தனது நடையால் மயக்குவதும், பிறகு கஞ்சிக்குத் திண்டாட்டப்படும் மைனர்களின் கொடுமையும், கடைசியாக புல் புல் சுந்தரி ஜில் ஜில் மைனரை விட்டு விலகி கஞ்சிக்குபஞ்சையாகித் தகரார்பட்டு உடுத்த ஓர் ஆடையுமின்றி கால் நடையாய் நடந்து கஷ்டப்பட்டு வருவதும், தாய்க்கிழவி லக்ஷக்கணக்கான பொருளை யெல்லாம் அபகரித்து அடக்கம் செய்தபிறகு பூமிக்குள் அமிழ்ந்து விடும் செய்கையும், புல் புல் சுந்தரியை போலீசார் கைதி செய்வதும், மாஜிஸ்டிரேட் நடவடிக்கைகளும், ஜில் ஜில் மைனர் சாஹசமும், ஆக இவ்வரிய நாவல் இதுவரை வெளிவந்ததில்லை, உடனே ஒவ்வொரு குடும்பத்தார்களும் வாங்கி வாசிக்க வேண்டியது. இதன் விலை அணா 4.

பி. எம். அலக்ஜான்ரா அண்டு கம்பெனி,
நெ 324, தங்கசாலை தெரு, மின்ட் போஸ்டு, மதறாஸ்.